**தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று மற்றும் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடும் விடயத்தை நடாத்திச் செல்வதற்காக முற்பணக் கணக்கு உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 11 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும்

பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உணவுக் ஆணையாளர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. | செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக்கி தயாரிக்கப்பட்டிருக்காமை. | 2.1.1 |
| | | 2. | செய்பணிகள் நிறை வேற்றப்படாமை. | 2.1.2 |
| | | 3. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப் படாமை மற்றும் செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.2 |
| | | 4. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப் படாமை | 2.9 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்படுகளுக்காக அதிகாரமளிப் பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கு அந்த அரசின் நிதியத்திலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | மனித வள முகாமைததுவத்தில் குறைபாடுகள. | 2.10 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமைத்து வத்தில் குறைபாடுகள் | 2.3 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதி களை அறவிடுவதற்கு விஷேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோ கத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | 1. அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடப்படாமை.<br>2. கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து முடிவுறுத்தும் அலுவல்களை நடாத்துதல் மற்றும் முற்பணக் கணக்கில் ஒடுக்கல் கணக்கு அலுவல்களை பூர்த்தி செய்யாமை | 2.6<br>2.7 |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல்கள் மேற்கொள்வதெனவும் | முகாமைத்துவ பலவீனங்கள் | 2.4 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதியில் 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) எதிர்பார்த்த பிரதான செய்பணிகளை நிறைவேற்றக் கூடிய விதமாக செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்காதிருந்ததுடன் எதிர்பார்த்த 05 பிரதான கருமங்களில் ஒரு கருமமான ‘‘கிருமிகளின் ஆபத்துக்கள் இன்றிய தானிய கலஞ்சிய சுற்றாடல் ஒன்றினை ஏற்படுத்துதல்’’ என்ற கருமம் மாத்திரம் மற்றும் செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தியிந்தது.

(ஆ) திணைக்களத்திற்கு சொந்தமான பிரதான செய்பணி ஆகிய கலஞ்சியங்களில் 100,000 மெற்றிக் தொன் பாதுகாக்கப்பட்ட அரிசி ஒதுக்கம் ஒன்றினை பேணப்பட வேண்டுமெனினும், அது தொடர்பான திட்டங்கள் ஏதும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

(இ) 2017 ஏப்ரல் 05 திகதி நடைபெற்ற பொது கணக்குக் குழு கூட்டத்தில் திணைக்களத்தில் பிரதான கருமங்களில் கீழ் திணைக்களத்தின் சேவையை யதார்த்மாக ஆக்குவதற்காக கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்று எடுப்பதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று தயாரித்து அமைச்சரவைக்கு சமர்பிக்கும்படி அறிவித்திருந்த போதிலும், 2018 செப்டம்பர் 11 திகதி வரை செயற்திட்ட அறிக்கை ஒன்று மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்பித்திருக்கவில்லை.

**2.1.2 செய்பணிகளை நிறைவேற்றாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த ஆண்டின் போது திணைக்களத்தினால் வெளிநிறுவனங்களுக்கு புகையூட்டல் சேவை வழங்கியதன் மூலம் ரூபா 2,205,772 இற்கான வருமானம் ஒன்றினை உழைத்திருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி புகையூட்டல் சேவை வழங்குவதன் மூலம் ரூபா 1 மில்லியன் வருமானம் உழைப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த உண்மையான வருமானம் ரூபா 72,119 ஆகக் காணப்பட்டதுடன் அது திட்டமிட்ட வருமானத்தில் 7.2 சதவீதமாகவும், கடந்த ஆண்டிற்கான வருமானத்துடன் ஒப்பிடும் போது 3.27 சதவீதமாக காணப்பட்டது.

(ஆ) உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 05 பிரதான கருமங்கள் நிறைவேற்றும் குறிக்கோளுடன் அரிசி பாதுகாக்கப்பட்ட இருப்பு ஒன்றாக பேணப்படுதல் மற்றும் ஏற்றுமதிக்காக தொடர்புபடுத்தும் நோக்கில் தேவையான நியமங்களின் கீழ் உள்நாட்டு அரிசி கொள்வனவு செய்யும் செயற்படுத்துவதற்காக வேயங்கொடை கலஞ்சிய வளவில் 06 கலஞ்சியங்களை நவீனமயப்படுத்துவதற்காக 2012 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரையான காலப்பகுதியில் ரூபா 252.06 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 ஆண்டிற்கான முன்னோடி செயற்திட்டத்தின் வெற்றிகரத் தன்மையை மதிப்பாய்வு செய்வதற்காக 5400 மெற்றிக்தொன்கள் கொள்திறனினைக் கொண்டிருந்த வேயங்கொடை 10 ஆம் இலக்க கலஞ்சியத்தில் கயஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 668 மெற்றிக் தொன் அரிசி இருப்பு முடிவடைந்த பின்னர் 2014 ஜனவரி 01 முதல் 2018 ஜுலை 31 திகதி வரை உணவுத் திணைக்களத்திடம் பாதுகாகப்பட்ட அரிசி இருப்பு ஒன்று கலஞ்சியத்தில் காணப்படவில்லை. எவ்வாறாயினும், 2018 பெப்ரவரி 28 திகதிய மற்றும் அமப/18/0244/723/004 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 05 கலஞ்சியங்களை நவீன மயப்படுத்துவதற்காக 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது முறையே ரூபா 175 மில்லியனும், ரூபா 150 மில்லியனும், ரூபா 60 மில்லியனும் ஆக மொத்தம் ரூபா 385 மில்லியன் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

**2.2 பெறுகை செயன்முறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்**

**பெறுகைகளை திட்டமிடல்**

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை செயன்முறையின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகள் நிறைவேற்றுவதற்காக ரூபா 205.50 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்ததுடன், அவற்றில் ரூபா 181.28 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டம் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) திணைக்களம் 2017 ஆண்டிற்காக வருடாந்தம் உத்தேசித்த பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த கருமங்களை நிறைவேற்றக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டிடங்கள் நிர்மாணித்தல் திருத்த வேலைக்கான தேறிய ஏற்பாடுகள் ரூபா 200.50 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், செலவுகள் ரூபா 176.90 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், வருடாந்தம் உத்தேசித்த பெறுகை திட்டத்தில் கட்டிடங்கள் நிர்மாணித்தல் மற்றும் திருத்த வேலைக்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒவ்வொரு ஒப்பந்த வேலைகளுக்கும் பெறுகை நேரசூசி ஒன்று தயாரித்து இருக்காமையால், வழங்கப்பட்டிருந்த ஒப்பந்த வேலைகள் உரிய காலத்தில் மற்றும் உரிய முறையில் நிறைவேற்றப்படுவதாக மற்றும் ஒப்பந்த வேலைக்காரர்கள் மற்றும் வழங்குனர்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படுகின்றனவா என தொடர் செயல் நடவடிக்கை மேற்கொள்வதற்காக திணைக்களத்தினால் ஒப்பந்த வேலை நிருவாக திட்டமொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) (i) ரூபா 169,201,859 தொகை மதிப்பீட்டுக் கிரயத்தை உடைய வேயங்கொட களஞ்சியத் தொகுதியில் விஞ்ஞான ரீதியான கட்டுப்படுத்தப்பட்ட சுற்றாடல் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட செயன்முறையை பயன்படுத்தி 05 களஞ்சியங்களை அபிவிருத்தி செய்யும் 03 பெறுகைகளுக்கான கூறுவிலைகள் அழைத்த போது பெறுகை அறிவித்தல் சிங்களம் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய 3 பத்திரிகைகளிலும் ஆங்கில மொழி மூலம் மாத்திரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக விலைமனுதாரர்களுக்கு அவர்களின் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு காணப்பட்ட சந்தர்ப்பங்கள் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்திற்கும் மிகவும் அனுகூலமான விலைமனுதார்களை தெரிவு செய்தல் வரையறுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக பெறுகை செய்முறையின் ஒரு குறிக்கோள் ஆகிய தகைமையுடைய அக்கரையுடைய தரப்பினருக்கு பங்குபற்றுவதற்காக உச்ச மட்ட சந்தர்ப்பம் வழங்கும் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) விஞ்ஞான ரீதியான கலஞ்சியப்படுத்துவதற்காக நியமனம் செயற்பாட்டு குழு 2016 ஜுன் மாதம் 15 திகதிய கூட்ட அறிக்கையின் பிரகாரம் சமர்ப்பிப்பதற்கு உத்தேசித்திருந்த களஞ்சியங்களின் வெற்றிகரத் தன்மையை தக்கித்துக் கொள்வதற்காக ஒரு ஒப்பந்தகாரருக்கு கூடிய அளவு 02 கேள்விகள் மாத்திரம் வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 5 கலஞ்சியங்களின் சிவில் மற்றும் மின்சார வேலை (Civil and Electrical) களுக்காக 02 கேள்விகள் என கூறுவிலைகள் அழைக்கப்பட்டு ஒரு கம்பனிக்கு 05 கலஞ்சியங்களினதும் ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) சொத்துக்களை ஆவணப்படுத்துதல்

(i) 1987 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் காணிகள் கட்டிடங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 2018 ஆண்டின் போது பதிவேடு தயாரிக்கும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத போதிலும், அங்கு திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து காணிகள் கட்டிடங்கள் தொடர்பான விபரங்கள் உட்படுத்தியிருக்கவில்லை.

(ii) 2002 திசெம்பர் 28 திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணினி துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான கணினிகள் பதிவேடு தயாரித்திருக்கவில்லை.

(iii) 2017 ஜூன் 28 திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் கொம்ப்ட்டோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய திணைக்களத்தின் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கும் போது, சொத்துக்களின் கிரயத்தை குறிப்பிடும் போது 2013 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாக கொண்டிருந்தது.

(iv) வேயங்கொட கலஞ்சியத் தொகுதியின் காணியின் அளவு மற்றும் அதனது பெறுமதியினை குறிப்பிடும் போது அரச நிறுவனங்களுக்கு சாட்டப்பட்டிருந்த 10 ஏக்கர் காணியின் அளவையும் சேர்த்து தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(v) திணைக்களம் நிறுவப்பட்டுள்ள 0.7145 ஹெக்டயர் அளவான காணி, மற்றும் அதில் அடங்கியுள்ள கட்டிடங்களின் பெறுமதி, பான்ஸ் இடத்தில் அமைந்துள்ள 1.5 ஏக்கர் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் ஒருகொடவத்த 8.42 ஹெக்டயர் அளவான காணி தொடர்பாக தகவல்கள் உட்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) சொத்துக்களின் மூலம் அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்திற்கு சொந்தமான 121 கலஞ்சியங்கள் காணப்படுவதுடன் அவற்றில் 40 அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கும், 40 களஞ்சியங்கள் அரசதுறை நிறுவனங்களுக்கு வாடகை இன்றியும் 20 கலஞ்சியங்கள் உணவு திணைக்களத்தின் பயன்பாட்டிற்காகவும், 18 களஞ்சியங்கள் பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கும் வழங்கியிருந்ததுடன் 03 களஞ்சியங்கள் பாவணைக்கு பொருத்தமற்ற நிலைமையில் காணப்பட்டது. அவற்றில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுத்திருந்த களஞ்சியங்களில் இருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 54,330,341 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

- ஒருகொடவத்த 1 ஆம் இலக்க களஞ்சியம் 2017 ஜனவரி 01 திகதி முதல் திசெம்பர் 31 திகதி வரை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகை ரூபா 500,000 தனியார் கம்பனி ஒன்றிற்கு வாடகைக்கு கொடுத்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது உரிய முறையில் வாடகைத் தொகை அறவிடப்பட்டிருக்காததுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 6,005,760 தொகை வாடகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அவற்றில் 2018 செப்தெம்பர் 11 திகதி அளவிலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 4,979,543 தொகையான நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக திணைக்களத்தினால் போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ஒருகொடவத்த 15 மற்றும் 16 இலக்க களஞ்சியங்கள் 2009 இற்கு முன்னர் வாடகைக்கு பெற்றிருந்த தனியார் கம்பனி ஒன்றில் இருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,734,095 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும், 2018 செப்தெம்பர் 11 திகதி அளவிலும் அந்த வாடகைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) திருகோணமலை, சீன துறைமுகத்தில் அமைந்துள்ள தானியகம வீட்டு தொகுதியில் காணப்படும் 352 வீடுகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 1982 மார்ச் 12 திகதி உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வீட்டுத் தொகுதி அமைந்துள்ள காணியின் உரிமை உணவு ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வீடுகள் பிரீமா கம்பனியின் ஊழியர்களுக்கு மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் அரச மற்றும் அரை அரசசார் ஊழியர்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வீடுகளில் இருந்து 2017 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 5,846,234 இற்கான வாடகை கிடைக்க வேண்டியிருந்தது.

(iii) லங்கா சதொச நிறுவனத்திற்கு வாடகைக்கு கொடுத்திருந்த திணைக்களத்திற்கு சொந்தமான 11 களஞ்சியங்களில் இருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 21,138,123 தொகையான களஞ்சிய வாடகை மற்றும் ரூபா 908,035 தொகைக்கான தரை ஏந்தானங்களுக்கு அறவிடப்பட வேண்டிய தொகை 2018 செப்தெம்பர் 11 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை.

**(இ) அரச சொத்துக்களின் பெறுமதி மற்றும் தரம்சார் தன்மை குறைவடைதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 மார்ச் 15 திகதிய அம்ப/17/0383/710/007 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் திணைக்களத்திற்கு சொந்தமான கொழும்பு 07 பான்ஸ் இடத்தில் அமைந்துள்ள இலக்கம் 17 மற்றும் 17A இலக்கங்களிலுள்ள 1.5 ஏக்கர் தரை அளவினை கொண்ட காணி இலங்கையில் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு ஒதுக்குவதற்காக அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும், 2018 செப்தெம்பர் 11 திகதி வரை காணி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த தரையில் 08 கட்டிடங்கள் காணப்பட்டதுடன் அந்த கட்டிடங்கள் வாடகை இன்றி அரச நிறுவனங்கள் பல வருட காலமாக பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. இந்த காணி பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு வழங்குவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் காணியில் காணப்பட்ட கட்டிடங்கள் மற்றும் அதில் அடங்கியுள்ள துணைக்கருவி பெறுமதிகள் தொடர்பாக அரசாங்க பெறுமதி மதிப்பீடு ஒன்று பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்காமல் 02 கட்டிடங்கள் தவிர மீதியான கட்டிடங்கள் உடைத்து அகற்றப்பட்டிருந்தது.

(iii) இந்த காணியில் காணப்பட்ட கட்டிடங்களை பயன்படுத்தி வந்த அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான அலுவலக உபகரணங்களுடன் கட்டிடங்களில் காணப்பட்ட அனைத்து துணைக்கருவிகளையும் அகற்றி இருந்தது. எவ்வாறாயினும் கட்டிடத் துணைக் கருவிகள் அகற்றியதால் ஏற்பட்டிருந்த நட்டத்தை உரிய நிறுவனங்களில் இருந்து அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) வெளி தரப்பினருக்கு வழங்கியிருந்த சொத்துக்கள்**

திணைக்களத்தினால் இரத்மலானை களஞ்சிய தொகுதியில் முறைசாராத விதமாக வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(i) திணைக்களத்திற்கு சொந்தமன 01 ஆம் இலக்க இரத்மலானை களஞ்சியத் தொகுதியில் உள்ள களஞ்சியங்கள் முறையான அங்கீகாரம் இன்றி, ஆதனங்கள் தொடர்பான அறிக்கை ஒன்று மற்றும் வாடகை உடன்படிக்கை இன்றி, இரத்மலானை பொருளாதார நிலையத்திற்கு வாடகை இன்றி வழங்கப்பட்டிருந்தது.

(ii) பொருளாதார நிலையம் நடாத்தப்படும் கட்டிடத்திற்கு அடுத்ததாக திணைக்கள காணியில் தனியார் தரப்பினரினால் அங்கீகாரம் இன்றி கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த ஆதனத்தின் உரிமையை உணவுத் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.4 முகாமைத்துவப் பலவீனங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதி அளவில் 22,500 மெற்றிக் தொன்கள் களஞ்சியப்படுத்தக் கூடிய விதமாக வேயங்கொடை களஞ்சிய இலக்கம் 01,07,08,09,10 மற்றும் 16 ஆகிய களஞ்சியங்கள் நவீனமயப்படுத்தியிருந்த போதிலும் கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 13,313 மெற்றிக் தொன்கள் அரிசி மாத்திரம் 2017 நவம்பர் மாதம் முதல் 2018 மார்ச் 15 திகதி வரை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. இவை களஞ்சியப்படுத்தக் கூடியதாக உள்ள இருப்பில் 59 சதவீதம் மாத்திரமேயாகும். எவ்வாறாயினும் வேயங்கொடை களஞ்சியத் தொகுதியின் மின்சாரக் கட்டணம் 2017 ஆண்டின் போது ரூபா 869,537 தொகையும், 2018 ஆண்டு ஜனவரி 01 முதல் ஜூன் 30 வரை ரூபா 5,142,730 தொகையுமாக மின்சாரக் கட்டணச் செலவு மிகவும் கூடிய பெறுமதியினை பெற்றிருந்தது.

(ஆ) திணைக்களத்தின் களஞ்சியத்திற்கு கிடைக்கும் அரிசி இருப்பினை களஞ்சியப்படுத்தும் போது தேவையான ஆய்வுகூட பரிசோதனைகள் மற்றும் தரப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக 2016 ஆண்டின் போது வேயங்கொடை பிராந்திய உணவுக் களஞ்சியத்தில் ஒரு களஞ்சியம் ரூபா 3,495,536 தொகை செலவிடப்பட்டு ஆய்வு கூடத்திற்கு தேவையான உபகரணங்களுடன் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் மாதத்தில் தரக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் திணைக்களத்திற்கு சொந்தமான அரிசி இருப்பு காணப்படாமையின் காரணத்தினால் அந்த ஆய்வு கூடத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசுகளில் இருந்து இந்த நாட்டிற்கு கிடைத்திருந்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு சொந்தமான 5000 மெற்றித்தொன் விரைவாக புகைபிடித்து தரும் படி உணவு ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட சேவை திணைக்களத்தினால் மேற்கொள்வதற்கு தேவையான ஆரம்ப தேவைகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தினால் வெளிநிறுவனங்களில் இருந்து கூறுவிலைகள் வழங்கும் அடிப்படையில் அந்த சேவை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் அதற்காக செலவிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1.06 மில்லியன் தொகை 2018 செப்தெம்பர் 11 திகதி வரை அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களம் 09 அரச நிறுவனங்களுக்கு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுத்திருந்த 10 களஞ்சியங்களுக்காக திணைக்கத்தினால் செலுத்தியிருந்த ரூபா 4.30 மில்லின் தொகையான வீதவரி குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து மீளளிப்புச் செய்திருக்கவில்லை.

(உ) திணைக்களத்தினால் பயன்படுத்தும் இரத்மலானை களஞ்சியத் தொகுதியில் களஞ்சியம் ஒன்றிற்காக செலுத்த வேண்டிய ரூபா 1.67 மில்லியன் வீதவரி கட்டணம் மற்றும் அதில் அடங்கியுள்ள தண்டப்பணம் என்பனவற்றை 2018 செப்தெம்பர் 11 திகதி வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2017 திசெம்பர் 31 திகதி அளவில் நீதிமன்ற அலுவல்களுக்காக தொடர்புபடுத்தியிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 47 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 32 வழக்குகளம் தானியாகம வீட்டுத்தொகுதியில் வீடுகளின் உரிமையை திருப்பிப் பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்தவையாகும். மீளாய்வாண்டின் போது இந்த வழக்குகளில் 05 மாத்திரம் முடிவடைந்திருந்ததுடன் ஏனைய வழக்குகள் ஏதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு மாநகர சபை எல்லையில் அமைந்துள்ள வீதவரி இலக்கங்கள் 330 மற்றும் 330A இல் அமைந்துள்ள உணவுத் திணைக்களம் அமைந்துள்ள காணியின் உரிமை 2018 ஜூன் 30 திகதி அளவிலும் உணவுத் திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் காணி ஒப்படைத்தல் சான்றிதழ்கள் கிடைத்திருக்கவில்லை.

(ஏ) வேயங்கொடை விஞ்ஞான ரீதியான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்துவதற்காக 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது அரிசி வழங்கும் அடிப்படையில் அரிசி ஆலை உரிமையாளருக்கு வழங்கியிருந்த நெல் தொடர்பாக பெறவேண்டிய அரிசியின் தொகை நெல் ஆலை உரிமையாளர்களினால் வழங்கியிருக்காமையினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 7.39 மில்லியன் தொகை அறிக்கைத் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.5 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 225.46 | 188.07 | 37.39 | 16.58 |
| | மூலதன | 27.82 | 18.86 | 8.95 | 32.17 |
| | **மொத்தம்** | **253.28** | **206.93** | **46.35** | **18.29** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2014 | மீண்டுவரும் | 151.84 | 150.76 | 1.08 | 0.71 |
| | மூலதன | 22.87 | 16.96 | 5.91 | 25.84 |
| | **மொத்தம்** | **174.71** | **167.72** | **6.99** | **4.00** |
| 2015 | மீண்டுவரும் | 206.69 | 192.64 | 14.05 | 6.79 |
| | மூலதன | 21.68 | 2.07 | 19.68 | 90.72 |
| | **மொத்தம்** | **228.37** | **194.65** | **33.72** | **14.77** |
| 2016 | மீண்டுவரும் | 298.87 | 294.28 | 4.60 | 1.54 |
| | மூலதன | 59.43 | 49.58 | 9.85 | 16.54 |
| | **மொத்தம்** | **358.30** | **343.86** | **14.45** | **4.03** |
| 2017 | மீண்டுவரும் | 530.84 | 529.43 | 1.40 | 0.26 |
| | மூலதன | 204.03 | 180.13 | 23.90 | 11.71 |
| | **மொத்தம்** | **734.87** | **709.56** | **25.31** | **3.44** |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மதிப்பீடுகள் முறைப்படி மற்றும் சரியான முறையில் தயாரிக்காமல் கட்டிட நிர்மாணித்தல் செலவு விடயத்தின் கீழ் வேயங்கொடையில் அமைந்துள்ள களஞ்சியத்தில் மின்சார முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 38.00 மில்லியனிற்கான குறைநிரப்பு ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை மின்சார சபையின் மதிப்பீட்டின் பிரகாரம் அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 11.97 தொகை மாத்திரமே.

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்தின் 30001 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 7.00 | 7.00 | 3.60 | 6.52 | 42.00 | 19.13 |

### நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் மீதிகள் தவிர ரூபா 2,330,611 தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதி 20 வருடங்கள் முதல் 25 வருடங்கள் வரையான

காலவீச்சுகளில் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கான தொடர் செயல் நடவடிக்கை அலுவல்கள், பலவீன நிலைமையில் காணப்பட்டதுடன் அந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக திணைக்களத்திற்கு இயலாதுள்ளது.

**2.7 கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து ஒழித்தல் அலுவல்களை நடாத்துவதற்கான முற்பணக் கணக்கு**

அமைச்சரவையின் தீர்மானம் ஒன்றின் படி முற்பணக் கணக்கு விடயம் 01 இற்கான கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடும் விடயத்திற்காக அலுவல்களை நடாத்துவதற்காக உணவுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஒழித்தல் விவகாரங்கள் பூர்த்தி செய்யப்படாமை**

(i) 2003 திசெம்பர் 30 ஆந் திகதிய அமப/03/1176/126/017/ஈபீசீ/445 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மேலதிகப் பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தினால் பீடீ/ஏடீஏசீ/சீஓஎம்/எப்சீ/எப்டீ ஆம் இலக்க மற்றும் 2004 ஆகஸ்ட் 23 திகதிய கடிதத்தின் மூலம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட உணவு கொள்வனவு செய்தல் மற்றும் வினியோகித்தல் முற்பணக் கணக்கு 2004 திசெம்பர் 31 திகதி மூடுவதற்கும் மற்றும் ஒழித்தல் விடயங்களுக்காக திணைக்களம் மற்றும் அமைச்சின் கீழ் ஒழித்தல் அலகு ஒன்று நடாத்தும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ்வாறான அலகு ஒன்று நியமனம் செய்யப்பட்டதற்கான சான்றுகள் காணப்படாததுடன் அந்த ஒழித்தல் விடயங்கள் உணவு ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 13 வருடங்கள் கடந்திருந்த போதிலும் ஒழித்தல் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) அதேபோல் அறவிடப்பட முடியாத கடன்பட்டோர் மற்றும் தொழிற்படு நட்டத்தை பதிவழிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் காட்டப்பட்டிருந்த போதிலும், இருப்பு குறைதல் மிகை விதிப்பு கூட்டுறவு சங்க கடன்பட்டோர் மீதியை தீர்ப்பதற்காக ஏற்பாடுகள் கட்டம் கட்டமாக மேற்கொள்ளல் மற்றும் உணவுத் திணைக்களத்தினால் ஒழித்தல் முற்பணக் கணக்கை சேர்ந்த நிலையான சொத்துக்கள் அரசாங்க நெல் மற்றும் அரிசி களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்துதல் போன்ற காரணங்களினால் ஒழித்தல் கணக்கை தீர்த்து முடிவு செய்வதற்காக குறிப்பிட்ட நாள் ஒன்று சொல்லமுடியாத நிலையில் உள்ளதாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ளது.

(iii) மீளாய்வாண்டு ஆரம்ப திகதியில் உள்ளவாறு பதிவழிப்பதற்கான நட்டங்களின் பெறுமதி ரூபா 4,046.69 மில்லியனாக காணப்பட்டதுடன், அதில் அடங்கியுள்ள உணவு கொள்வனவு செய்தல் மற்றும் வினியோகித்தல் ஒழித்தல் கணக்கின் திரண்ட நட்டம் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர்களிடம் அறவிடப்பட முடியாத மிகைவிதிப்பு மீதி என ரூபா 456.82 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது செலவு விடயம் 1701 இன் கீழ் ஏற்பாடுகள் பெற்று பதிவழிக்கப்பட்டிருந்தது.

(iv) தொடர்ந்தும் அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்காக உள்ள ரூபா 3,590.17 மில்லியனிற்கான நட்டங்களின் மொத்தக் கூட்டுத்தொகை ஆக்கப்பட்டுள்ள விதம் தொடர்பாக காட்டக்கூடிய விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**(ஆ) அங்கீகாரம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2002 மற்றும் 2003 ஆண்டுகளின் போது ரூபா 1.07 மில்லியன் தொகை பெறுமதியான 02 மோட்டார் வாகனங்கள் விவசாய அபிவிருத்தி அமைச்சிற்கு மற்றும் கூட்டுறவு அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. இந்த 2 வாகனங்களும் ஒப்படைக்கப்பட்டு 14 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் போது இப் பெறுமதி முறையான அங்கீகாரம் இன்றி திரண்ட இலாப நட்டக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ii) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 88.50 மில்லியன் தொகைக்கான சமூக சேவை பணிப்பாளர் வரட்சி நிவாரண உதவிக் கடன்பட்டோர் பெறுமதியினை முறையான அங்கீகாரம் இன்றி திரண்ட இலாப நட்டக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(iii) முற்பணக் கணக்கிற்குரிய சொத்துக்கள் தேறும் சந்தர்ப்பத்தில் உரிய கணக்கீட்டு சீராக்கல்கள் மேற்கொள்வதாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக முறையான அங்கீகாரம் இன்றி அகற்றல் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 27.66 மில்லியனிற்கான நிலையான சொத்துக்கள் தேறிய பெறுமதி திரண்ட இலாப நட்டக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**(இ) அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட கடன்பட்டோர் மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 22 மாவட்டங்களைச் சேர்ந்த 175 பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு அரிசி, மா, சீனி, உணவு முத்திரை மற்றும் மண்ணெண்ணெய் முத்திரை கடன் அடிப்படையில் வழங்கியிருந்த காரணத்தினால் கூட்டுறவு சங்கங்களில் இருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 170,945,536 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது அந்த கடன் தொகையில் ரூபா 422,001 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்தல் பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

(ii) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 47,265,198 தொகைக்கான இருப்பு குறைவு கடன்பட்டோரிடம் ரூபா 34,474 தொகை மாத்திரம் ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த மீதிகளில் ரூபா 957,334 தொகை அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் மீது பதிவழிக்கப்பட்டிருந்தது. மேலும், ஏனைய கடன்தொகைகளை அறவீடு செய்வதற்காக தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(iii) பல வருட காலம் முதல் அரச அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் இருந்து ரூபா 172,206,845 தொகை அறவீடு செய்ய வேண்டியிருந்ததுடன் அவற்றில் மீளாய்வாண்டின் போது பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்காததுடன் இந்த கடனை தீர்ப்பதற்காக தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.8 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தில் காணப்படும் 04 பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 149,721 மில்லியன் தொகை காணப்பட்டதுடன் அவற்றில் 6000/0000/0013/0131/000 இலக்கங் கொண்ட வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 54,774,646 இற்கான மீதியில் 1989 ஆண்டு முதல் காணப்படும் வைப்புக்களும் அடங்கியிருந்தன. நிதிப் பிரமாணம் 571(3) இன் படி அரச வருமானத்திற்கு எடுக்கக் கூடிய வைப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி தீர்ப்பதற்காக உரிய நடவடிக்கைகள் திணைக்களத்தினால் எடுத்திருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவி இருக்காததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் அவ்விடயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் திணைக்களம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேற்கூறிய 2.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 51.62 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 05 | 03 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 116 | 45 | 71 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 103 | 53 | 50 | - |
| (v) | அமைய/ஒப்பந்த | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 227 | 103 | 125 | 01 |

திணைக்களத்தின் களஞ்சியங்களில் அரிசி இருப்புக்கள் காணப்படாமை, வெளி நிறுவனங்களில் புகைபிடித்தல் சேவைகள் இந்த திணைக்களத்திற்கு கிடைக்காமை ஆகிய காரணங்களினால் திணைக்களத்தில் தரக் கட்டுப்பாட்டு பெண் உத்தியோகத்தர் செயற்படாதிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடமையில் இருந்த 11 புகைபிடிப்போர்கள் திணைக்களத்தின் பல்வேறு கிளைகளில் அலுவலக உதவியாளர்களுக்கு உரிய வேலை சாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.